# 68

# "மேலும், முடிவில்"

## (22:6-21)

*ஆல்பர்ட் பால்டிங்கர் என்பவரிடத்தில் இருந்து கடன் வாங்கப்பட்ட பின்வரும் வார்த்தைகளைக் காட்டிலும் வேறு எந்த வார்த்தைகளும், நமது படிப்பின் இந்தக் கடைசி பாடத்தை அதிக மேன்மையாக தொடங்க இயலாது:*

> *நாம் பயணித்து வந்துள்ள நீண்ட மற்றும் கடினமான சாலை ... மகிமையின் நாடு பற்றிய பறவையின் - கண்ணோக்கிலான காட்சி நமக்குத் தரப்பட்டு உள்ள இடமாகிய "உயர்ந்த மலைக்கு" இப்போது நம்மைக் கொண்டுவந்து சேர்த்துள்ளது. நமக்குப் பின்னால், "இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரைகளுடைய," இறந்த உடல்களும், அவிந்து போன எரிமலையின் சாம்பலும், வேலையை முடித்துக்கொண்டுள்ள சூறாவளிகளின் குப்பைகூளங்களும், சமூக பூமியதிர்ச்சியின் பேரழிவுகளும், மாயாவாத [பாபிலோன்] மற்றும் தேவனற்ற பேரரசுகளின் கந்தல்களும் கிடக்கின்றன. பாவமும் துன்மார்க்கமும் மனிதரின் வெறிகளும் தங்களால் இயன்ற அளவுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. அர்மகெதோன் முடிவடைந்துள்ளது. எல்லாஇடங்களிலும், தேவனுடைய ஆட்டுக்குட்டியானவர் வெற்றி கொண்டுள்ளார். இன்னும் எஞ்சியுள்ளது என்ன?*[1]

*வெளிப்படுத்தின விசேஷத்தை முடித்துவைக்க வேண்டும் என்பது மாத்திரமே எஞ்சியுள்ளது. 22ம் அதிகாரத்தின் கடைசி 16 வசனங்களை, ஆவியானவர் இப்புத்தகத்தை முடித்துவைக்கப் பயன்படுத்தினார்.*

*முதல் பார்வையில், இந்தப் பதினாறு வசனங்கள் தொடர்பற்றவைகள் போல் காணப்படுகின்றன.*[2] *நெருக்கமாக ஆய்வுசெய்யும்போது, இவ்வசனங்களின் பெரும்பான்மையான பகுதி, இப்புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும்*[3] *திறவுகோல் சிந்தனைகளைத் திரும்பக் கூறுகின்றவைகளாய் இருப்பதாகக் காணப்படும் - இவை, நான் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்ற சத்தியங்களாக உள்ளன. இவ்வசனப்பகுதி வேதாகமத்தின் கடைசி வார்த்தைகளைக் கொண்டிருப்பதால், ஏவுதல் பெற்று எழுதப்பட்டவற்றிலேயே கடைசி வார்த்தைகளைக் கொண்டிருப்பதால் இது நமக்கு விசேஷித்த வகையில் தனிச்சிறப்புடையதாக உள்ளது.*[4]

# *திரும்பக்கூறப்பட்ட சிந்தனைகள்*
# *(22:6-8, 10, 12, 13, 16, 20, 21)*

*வெளிப்படுத்தின விசேஷம் 22:6-21ல் உள்ள பல சிந்தனைகள் இப்புத்தகத்தின் தொடக்க வார்த்தைகளைப் பிரதிபலிக்கின்றன. இறை வெளிப்பாட்டின் தொடக்கத்தைத் திரும்பவும் வாசியுங்கள்:*

> *சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான் (1:1, 2).*

*22ம் அதிகாரத்தில் நாம், தூதன் யோவானிடத்தில், "... சீக்கிரமாய்ச் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார்" என்று கூறியதாக வாசிக்கின்றோம் (வசனம் 6; வசனம் 16ஐக் காணவும்). யோவான், "யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன்" என்று எழுதினார் (வசனம் 8அ).[5] இவ்விதமாக, வெளிப்படுத்தின விசேஷமானது (சிலர் நினைப்பதுபோல்) ஏவுதல்பெற்றிராத ஆதாரமூலங்களில் இருந்து வந்த சிந்தனைகளின் வகையல்ல என்று தேவன் நமக்கு நினைவூட்டுகின்றார்; இது அவரிடத்திலிருந்து வந்துள்ளது.*

*1ம் அதிகாரத்தின் தொடக்க வார்த்தைகள், "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை" என்ற சொற்றொடரைக் கொண்டுள்ளது (வசனம் 1). அவ்வதிகாரத்தின் 3ம் வசனம், "காலம் சமீபமாயிருக்கிறது" என்று கூறுகிறது. 22ம் அதிகாரம் இதேபோன்ற வார்த்தைகளைக் கொண்டுள்ளது: 6ம் வசனம், "சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளை" தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு தேவன் தமது தூதனை அனுப்பினார் என்று கூறுகிறது. 10ம் வசனத்தில் நாம், அந்தத்தூதன் யோவானிடத்தில் "காலம் சமீபமாயிருக்கிறது" என்று கூறி வார்த்தைகளை முத்திரை போடவேண்டாம்[6] என்று கூறினார். அந்தச் சொற்றொடர் நமக்கு, எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகள் பற்றிய கால அட்டவணையைத் தருவதல்ல. ஆனால், அந்த நாட்களில் துன்புற்ற கிறிஸ்தவர்களை உற்சாகமூட்டுவதே வெளிப்படுத்தின விசேஷத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது என்பதை நினைவூட்டுகிறது.*

*மேலும் நாம், இந்தப் புத்தகத்தின் தொடக்க வார்த்தைகளில், இதை வாசிப்பவர்களுக்கும், (கேட்பவர்களுக்கும்) கைக்கொள்பவர்களுக்கும் விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கண்டறிந்தோம்: "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிற*

*வைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்'' (1:3அ). இதேபோன்ற ஒரு ஆசீர்வாதத்துடன் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முடிவடைகிறது: "இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" (22:7ஆ). இவ்வசனத்தில் தேவன், நமது படிப்பு ஒரு மதிநுட்பமான பயிற்சியாக (மாத்திரம்) இருந்திருக்க வில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகின்றார்; வெளிப்படுத்தின விசேஷம் நமது எண்ணப்போக்குகளையும் வாழ்வையும் மாற்றுதலை நோக்கங் கொண்டுள்ளது.*

*முதல் அதிகாரத்தில் யோவான் "ஆசியாவிலுள்ள ஏழு சபைகளை" குறிப்பிட்டு எழுதியிருந்தார் (1:4அ; 1:11ஐக் காணவும்). கடைசி அதிகாரத்தில் கர்த்தர் யோவானிடம், "சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு, இயேசுவாகிய[7] நான் என் தூதனை அனுப் பினேன்" என்று கூறினார் (22:16அ). மீண்டும் தேவன், உள்ளூர் சபைக் குழுமங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக்கொண்டிருந்தார். இந்தப் புத்தகம் முழுமையுமே உள்ளூர் சபைக்குழுமங்களுக்கு உதவவும் அவற்றைப் பலப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டது என்பதை அவர் நமக்கு நினைவூட்டிக்கொண்டிருந்தார்.*

*1ம் அதிகாரத்தில், ''உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக'' என்பதே சபைக்குழுமங்களுக்கு யோவானின் வாழ்த்துதலாய் இருந்தது (வசனம் 4ஆ). 22ம் அதிகாரத்தை[யும்] அவர், பின்வரும் ஆசீர்வாதத்துடன் முடித்து வைத்தார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும்கூட இருப்பதாக" (வசனம் 21அ). இவ்விதமாக நமக்கு, தேவனுடைய கிருபையே நமது நம்பிக்கை மற்றும் ஆறுதல் ஆகியவற்றிற்குத் தொடக்கமும் முடிவுமாக உள்ளது என்பது நினைவூட்டப்படுகிறது.*

*1ம் அதிகாரத்தில் இயேசுவைப் பற்றி, யோவான் பின்வருமாறு எழுதினார், "இதோ, மேகங்களுடனே வருகிறார்" (வசனம் 7அ). இந்த நிகழ்ச்சியின் நிச்சயத்தன்மையானது, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் கடைசிப் பகுதியின் திறவுகோல் சிந்தனையாக உள்ளது.[8] "இதோ சீக்கிரமாய் வருகிறேன்"[9] என்று இயேசு மூன்று முறைகள் கூறினார்:*

> *இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் (22:7).*
>
> *இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது (22:12).*
>
> *இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும் (22:20).*

*நாம் எப்போதுமே ஆயத்தமாய் இருப்பது அவசியம் என்பதற்காகத் தேவன்*

*இந்த மூன்று நினைவூட்டுதல்களை அளித்துள்ளார், ஏனெனில் இயேசு திரும்பவும் வரும் நாளோ அல்லது நாழிகையோ நமக்குத் தெரியாது (மத்தேயு 24:36).*

*கடைசியாக, தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் 1ம் அதிகாரத்தில் விசேஷித்த இயற்பெயர்களைக் கண்டோம். 1:8ல் கர்த்தர்,[10] "நான் அல்பாவும், ஓமேகாவுமாய் இருக்கின்றேன்" என்று கூறினார். 1:17ல் இயேசு, "நான் முந்தினவரும் பிந்தினவருமாய் இருக்கின்றேன்" என்று கூறினார். 22ம் அதிகாரத்தில் இயேசு, "நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்" என்று கூறினார் (வசனம் 13). தேவனுடைய குமாரன் தெய்வீகமானவராக இருக்கின்றார், மற்றும் அவர் கனம்பண்ணப்பட வேண்டியவராய், கீழ்ப்படியப்படவேண்டியவராய் இருக்கிறார் என்று தேவன் நமக்கு நினைவூட்டுகின்றார்.*

*நமது வசனப்பகுதியில் மற்ற சிந்தனைகளும் திரும்பக் கூறப்பட்டுள்ளன, ஆனால் அவற்றை நாம், திறவுகோல் சத்தியங்களின்மீது தேவனுடைய "கடைசி வார்த்தைகள்" பற்றி ஆராயும்போது கவனிப்போம்.*

## *கடைசி வார்த்தைகள் (22:6-21)*

***வேதவசனங்களைப் பற்றிய கடைசி வார்த்தை (வசனங்கள் 6, 18, 19)***

*நமது வேதபாடப்பகுதியானது, யோவானிடம் தூதன், "இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள்"[11] என்று கூறுவதுடன் தொடங்குகிறது (வசனம் 6அ). இந்தக் கூற்றானது, 21 மற்றும் 22ம் அதிகாரங்களில் உள்ள பரலோகம் பற்றிய விவரிப்புக்கு விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது. இது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுமைக்கும் ஒரு தொகுப்புரைக் கூற்றாக இருப்பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கலாம். மற்றும், இது வேதவசனங்களின் ஒட்டுமொத்தத்தன்மை பற்றிய ஒரு அறிவித்தலாகவும் இருக்கக்கூடும்.*

*வேதாகமம் நம்பத் தகுதியானதாக இருப்பது ஏன்? 6ம் வசனத்தில் இதற்கான பதில் காணப்படுகிறது: "... பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர், ..." வேதாகமத்தை எழுதிய மனிதர்கள் தங்கள் சொந்த சிந்தனைகள், கருத்துக்கள் மற்றும் வார்த்தைகள் ஆகியவற்றை எழுதவில்லை. மாறாக, அவர்களின் ஆவிகளைத் தேவன் கட்டுப்படுத்தினார். "தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" என்று வலியுறுத்தினார் (2 பேதுரு 1:21).*

*வேதாகமம் தேவனுடத்தில் இருந்து வந்துள்ளதால், அதற்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். அந்தச் சிந்தனை, 18 மற்றும் 19ம் வசனங்களில் காணப்படும் வல்லமை நிறைந்த வார்த்தைகளினால் அதிகம் வலிவார்ந்த வகையில் வலியுறுத்தப்படுகிறதைவிட வேறு எங்கேயும் வலியுறுத்தப்படவில்லை:*

> இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார்; ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்.

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள பயங்கரமான வாதைகளைப் பற்றி நினைத்துப்பாருங்கள்; இந்தப் புத்தகத்துடன் எதையாகிலும் கூட்டுகின்ற எவரும் அந்த வாதைகளைக் கொண்டு சபிக்கப்படுவார். ஜீவவிருட்சம் உட்பட, பரலோகத்தின் ஆச்சரியமான ஆசீர்வாதங்களைப் பற்றி நினைத்துப்பாருங்கள்; இந்தப் புத்தகத்தில் இருந்து எதையாவது நீக்கிப்போடுபவர், அந்த ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்க இயலாது.[12]

புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகமும் இப்படிப்பட்ட தீமை நிறைந்த அச்சுறுத்தல்களுடன் முடிவதில்லை. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது ஏன்? ஒரு வேளை இந்தப் புத்தகத்தை மனிதர்கள் எவ்வாறெல்லாம் தவறாகப் பயன்படுத்துவார்கள் என்பதை தேவன், முன்னெதிர்பார்த்து இருக்கலாம். ஒருவேளை, மனிதர்கள் தங்கள் சுய கருத்துக்களை இதில் புகுத்தும்படி சோதிக்கப்படுவார்கள், மற்றும் சிலர் தங்கள் இறையியல் கொள்கையுடன் கருத்து வேறுபடுகிற பகுதிகளை நீக்கிப்போட விரும்புவார்கள் என்பதை தேவன் அறிந்திருக்கிறார் என்பதை நாம் அறியும்படிக்குத் தேவன் அனு மதித்திருக்கலாம்.

(தேவனுடைய வசனத்துடன்) கூட்டுதல் அல்லது (அதிலிருந்து) எடுத்துப் போடுதல் பற்றிய வார்த்தைகள், புதிய ஏற்பாட்டின் பிற புத்தகங்களில் காணப்படாதிருக்கலாம், ஆனால் இவைகள் வேத வசனங்களின் ஒட்டுமொத்தத்தன்மை குறித்துத் தேவனுடைய எண்ணப் போக்கைப் பிரதிபலிக்கின்றன. இதைப்போன்ற சிந்தனைகள் வேதாகமத்தின் தொடக்கத்திற்கு அண்மையில் கண்டறியப்பட்டுள்ளன (உபாகமம் 4:2), மற்றும் மையப்பகுதியில் (நீதிமொழிகள் 30:6) காணப்படுகின்றன. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரட்டிப்போடும் எவரொருவரும் சபிக்கப்படுவார் என்று பவுல் எச்சரித்தபோது, அவர் இதே கருத்தையே ஏற்படுத்தினார் (கலாத்தியர் 1:6-9).

வசனத்துடன் கூட்டுதல் என்ற பாவத்தைக் குறித்து சிறப்புக் கவனம் செலுத்துங்கள்: சிலர், வேதாகம நடைமுறையின் எதாவதொரு வடிவத்தைத் தாங்கள் கடைப்பிடிக்குமளவும், அதனுடன் எதையாவது கூட்டுவதோ அல்லது விரிவுபடுத்துவதோ எவ்விதத் தீங்கும் இழைப்பதில்லை என்று நினைக்கின்றனர். தேவன், தமது வசனத்துடன் யாரேனும் சிந்தனையற்ற வகையில் எதையாவது கூட்டினால், அவர்கள் அதன் சத்தியங்களை வெளிப்படையாக புறக்கணிக்கின்றவர்களைப் போலவே குற்றமுள்ளவர்

களாய் இருக்கின்றனர் என்று கூறுகின்றார்.

வேதவசனங்களில் உள்ள கடைசி வார்த்தை என்ன? வேதாகமம் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது என்பதால், அது மதிப்பளிக்கப்பட வேண்டும்!

**இயேசுவைப் பற்றிய கடைசி வார்த்தை (வசனங்கள் 7, 12, 13, 16, 20)**

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் தொடக்க வார்த்தைகள், இது, "இயேசுகிறிஸ்துவின் வெளிப்படுத்துதல்" என்பதை வலியுறுத்தின (1:1). இந்தப் புத்தகம் முழுவதிலும், இயேசுவே மையக்கருத்தாக இருந்திருக்கின்றார். அவ்வாறே, முடிவான வசனப்பகுதியிலும் அவரே மையக்கருத்தாக இருக்கின்றார். அவர் திரும்பத் திரும்ப, "நான் வருகிறேன்" என்று கூறியுள்ளார் (வசனங்கள் 7, 12, 20). அவர், "அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவரும்'' என்று அழைக்கப் பட்டுள்ளார் (வசனம் 13). மற்றும் அவர், "தாவீதின் வேரும் சந்ததியும்[13] விடிவெள்ளி நட்சத்திரமும்" என்றும் விவரிக்கப்பட்டிருக்கின்றார் (வசனம் 16ஆ).

"தாவீதின் வேரும் சந்ததியும்" என்ற சொற்றொடர், இயேசு தமது தெய்வீகத்துவத்தில், தாவீதின் வம்சவழிக்கு ஆதாரமூலமாயிருந்தார் மற்றும் அவர் தமது மனிதத்துவத்தில், தாவீதின் வழியில் வந்தவராயிருந்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டின் தாவீது வழியே கூறப்பட்ட வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றும் கிறிஸ்துவின் பிறப்பு, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றில் உணர்ந்தறியப்பட்டது (நடபடிகள் 2:24-36ஐக் காணவும்[14]).

தியத்தீராவில் ஜெயங்கொள்பவர்களுக்கு "விடிவெள்ளி நட்சத்திரம்" அளிக்கப்படும் என்று இயேசு கூறியிருந்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 2:28). விடிவெள்ளி நட்சத்திரம் என்பது, உதயத்திற்கு முன்பு, வழக்கமாக அடிவானத்தில் ஒளிரும் பிரகாசமான வெளிச்சமாகும். அது ஒரு புதிய நாளை அறிவிக்கிறது.[15] வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி வார்த்தைகளில், இயேசுவே "பிரகாசமான விடிவெள்ளிநட்சத்திரமாக" இருக்கின்றார் என்று வலியுறுத்தப்படுகிறது (வசனம் 16ஆ).

இயேசுவைப் பற்றிய கடைசி வார்த்தை என்ன? அவர் நமக்கு எல்லாவற்றிலும் எல்லாமுமாக இருக்கின்றார் ("ஆதியும் அந்தமும்") மற்றும் அவர் நமது நம்பிக்கையின் ஆதாரமூலமாக ("பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாக") இருக்கின்றார்!

**தேவனைப் பற்றிய கடைசி வார்த்தை (வசனங்கள் 8ஆ, 9)**

நமது வேதவசனப்பகுதியில், இயேசுவைப்பற்றிய கடைசி வார்த்தை மட்டுமின்றி, தேவனைப் பற்றிய கடைசி வார்த்தையும் அடங்கியுள்ளது. தூதன் யோவானிடத்தில் பரலோகத்தைப் பற்றிக் கூறியபோது, அந்த அப்போஸ்தலர் (19ம் அதிகாரத்தில் அவர் இருந்தது போன்றே) வியப்பில் மூழ்கியவராகி அங்கு செய்த அதே தவறை (மீண்டும்) செய்தார்:

*நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி[16] அவன் பாதத்தில் விழுந்தேன். அதற்கு அவன், நீ இப்படிச் செய்யாதபடிக்குபார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக் கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் என்றான் (வசனங்கள் 8ஆ, 9).*

*19ம் அதிகாரத்தின் செய்தியைத் தூதன் திரும்பக் கூறினார்: அவர் யோவானைப் போன்றே கட்டளைகளின் கீழ் இருந்தார், எனவே அவர் ஆராதிக்கக் கூடிய பொருளாய் இருக்கக்கூடாது.[17]*

*தேவனைப் பற்றிய கடைசி வார்த்தை என்ன? அவரை ஆராதியுங்கள்: அவரைத் துதியுங்கள், அவரை வழிபடுங்கள், மற்றும் அவரை உங்கள் வாழ்வில் முதலிடத்தில் வையுங்கள்! (மத்தேயு 6:33ஐக் காணவும்.)*

***ஒப்புவித்தல் பற்றி கடைசி வார்த்தை (வசனங்கள் 7, 10-12, 14, 15)***

*வேதவசனங்கள் மீதான, இயேசுவின் மீதான மற்றும் தேவன் மீதான கடைசி வார்த்தைகளை நாம் கண்டுள்ளோம். இந்தத்தெளிவான சத்தியங்களின் வெளிச்சத்தில், நாம் செய்யும்படிக்குக் கர்த்தர் நமக்கு கூறுபவற்றை நாம் செய்கின்றோமா இல்லையா என்பது ஏதாவது வேறுபாட்டை ஏற்படுத்துகிறதா? இந்தப் புத்தகத்தின் போதனைகளைக் "கைக்கொள்பவர்கள்" ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்று ஏற்கனவே நமக்கு கூறப்பட்டுள்ளது (வசனம் 7). அந்தச் சிந்தனையை 14, 15ம் வசனங்கள் விரிவாக்குகின்றன:*

> Blessed are those who wash[18] their robes,[19] that they may have the right to the tree of life, and may enter by the gates into the city. Outside are the dogs and the sorcerers and the immoral persons and the murderers and the idolaters, and everyone who loves and practices lying.

> *ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே[20] இருப்பார்கள்.*

*நமது படிப்புகளில் நாம் முன்பே கண்டுள்ளபடி, நாம் இயேசுவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிதலினால், அவரது இரத்தத்தில் "நமது அங்கிகளைத் தோய்த்து" இருக்கின்றோம் (7:14).[21] நாம் நமது வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க விருப்பமாய் இருந்தால் ஒழிய, பரலோகத்திற்குள் நாம் பிரவேசிக்க இயலாது.*

*22:15ல் உள்ள தேவபக்தியற்றவர்கள் பற்றிய பட்டியலானது, "நாய்கள்" என்ற வார்த்தையைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் 21:8ல் உள்ளது போன்றதாகவே காணப்படுகிறது. உலகத்தில், நாய்கள் வளர்ப்பு*

*மிருகங்களாகப் போற்றிப் பாதுகாக்கப்படும் பகுதியில் நீங்கள் வாழ்வீர்கள் என்றால், அந்த வார்த்தை உங்களுக்கு வினோதமானதாகப்படலாம். இவ்வசனத்தைப் புரிந்துகொள்வதற்கு, படாடோபமாகக் காப்பாற்றப்படும் ஒரு வளர்ப்புப் பிராணியைப் பற்றி நீங்கள் நினைக்காமல், உண்ணிப் பூச்சிகளினால் கடிபட்டு, அவலமாய் இருக்கும், சொறிபிடித்த ஒரு நாயைப் பற்றி நினைத்துப்பாருங்கள். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் எழுதப்பட்டபோது, சீறிக்குலைக்கும் நாய்கள் கூட்டங்களாகப் பயணித்தன, அவைகள் பழிக்கப்பட்ட துப்புரவாளர்களாய் இருந்தன. தேவபக்தியற்றவர்களைக் குறிப்பிடுவதற்கு இந்தச் சொற்றொடரை வேதாகமம் பயன்படுத்துகிறது. (உபாகமம் 23:18; 1 இராஜாக்கள் 21:19; சங்கீதம் 22:16, 20; பிலிப்பியர் 3:2 ஆகிய வசனங்களைக் காணவும்.)*

*7, 14, மற்றும் 15ம் வசனங்கள், கீழ்ப்படிதலுக்கான அவசியத்தை அடிக்கோடிடுகின்றன, ஆனால் நாம் எப்போது கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும்? அந்தக் கேள்விக்கான பதில், 10முதல் 12வரையுள்ள வசனப்பகுதியில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, இவ்வசனங்களில் வழக்கத்திற்கு மாறான மொழிநடை அடங்கியுள்ளது. யோவானிடம் தூதன் பின்வருமாறு கூறினார்,*

> *இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோட வேண்டாம்; காலம் சமீபமாயிருக்கிறது. அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் ... (வசனங்கள் 10ஆ, 11).*

*பின்பு, இயேசு, "இதோ சீக்கிரமாய் வருகிறேன் ... நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்றும் கூடுதலாகக் கூறினார் (வசனம் 12அ).*

*நீதியுள்ளவர்கள் இன்னும் நீதிசெய்வதில் நிலைத்திருக்கட்டும், என்று கர்த்தர் விரும்பியது ஏன் என்பதையும், பரிசுத்தமுள்ளவர்கள் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்று அவர் விரும்பியது ஏன் என்பதையும் புரிந்துகொள்வது சுலபமாயிருக்கிறது - ஆனால் அவர் தமது தூதனைக் கொண்டு, அநியாயஞ்செய்கிறவர்களும், அசுத்தமானவர்களும் தங்கள் தீயவழியில் தொடர்ந்து நிலைத்திருக்கட்டும் என்று கூறியது ஏன்? இது, ஒருவசனப்பகுதியானது எதைப் போதிக்கிறது என்பதைவிட எதைப் போதிக்காது இருக்கிறது என்பதில் நாம் அதிகம் தைரியமாய் இருக்கின்ற வேளைகளில் ஒன்றாக உள்ளது: (1) இது, ஒரு மனிதர் எப்படி வாழ்ந்தாலும், அவர் பரலோகம் செல்லுவார் என்று போதிப்பதில்லை என்று நாம் அறிகின்றோம் (வசனங்கள் 14, 15ஐக் காணவும்). (2) இது தவறு செய்வதற்கான ஊக்கப்படுத்துதலாய் இருப்பதை நோக்கங்கொண்டிருக்கவில்லை என்று நாம் அறிகின்றோம். (இவ்வசனப்பகுதியில், சரியானவற்றைச் செய்தல் என்ற கருத்தின்மீதே வலியுறுத்தம் உள்ளது.) (3) இது, பாவம் செய்கின்ற எல்லாருடைய விஷயங்களும் நம்பிக்கையற்றவைகளாய் இருக்கின்றன, நாம் அவர்களைப் பற்றி அக்கறைப்படத் தேவையில்லை*

*என்று போதிப்பதில்லை என்று நாம் அறிகின்றோம் (17ம் வசனத்தில் உள்ள அழைப்பைக் கவனிக்கவும்.)*

*என்றால் 11ம் வசனத்தின் நோக்கம்தான் என்ன? காலம் குறுகியதாக இருக்கிறது என்றுள்ள (வசனங்கள் 10, 12) இவ்வசனத்திற்கு முன்னும் பின்னும் வரும் வலியுறுத்தங்களின் வெளிச்சத்தில் காலமும் வாய்ப்பும் தீர்ந்துகொண்டிருந்தன என்பது இவ்வசனத்தின் செய்தியாய் இருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.[22] தேவபக்தியற்றவர்கள் உடனடியாகத் தங்கள் வாழ்வுகளை மாற்றிக் கொள்ளாவிட்டால், அதற்கு மிகவும் தாமதமாகிவிடும்: ஆயத்தமாய் இராதவர்கள் நித்தியம் முழுவதற்கும் ஆயத்தமாய் இராதவர்களாகவே போய்விடுவர், அதேவேளையில் இந்த வாழ்வில் ஆயத்தமாய் இருப்பவர்கள் தங்கள் தரநிலையை என்றென்றைக்கும் தக்கவைத்துக் கொள்வர்.*

*நீங்களும் நானும் நிச்சயமாய்க் கருத்தில் கொண்டிருக்க வேண்டிய காலமாக உள்ளது நிகழ்காலம் மாத்திரமே. " 'இப்பொழுதே' இரட்சணிய நாள்'' என்று வேதாகமம் போதிக்கிறது (2 கொரிந்தியர் 6:2). நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியம் என்று நாம் அறிந்தும் அதைச் செய்யத் தவறினால், பின்வரும் மூன்றில் ஒரு விஷயம் நடக்கக்கூடும்: (1) கிறிஸ்து வரக்கூடும் (வெளிப்படுத்தின விசேஷம் 1:7; 22:7, 12, 20); (2) நாம் இறந்துவிடக்கூடும் (எபிரெயர் 9:27); அல்லது (3) மனந்திரும்புதலுக்கு ஏற்ற வகையில் நாம் புதுப்பிக்கப்படுதல் என்பது சாத்தியமற்றுப்போகும் வகையில் பாவத்தில் நாம் கடினப்பட்டுப் போகக்கூடும் (எபிரெயர் 6:4-6).*

*ஒப்புக்கொடுத்தல் பற்றிய கடைசி வார்த்தை என்ன? நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவது அவசியமாய் இருக்கிறது, மற்றும் அதை நாம் இப்போதே செய்வது அவசியமாய் இருக்கிறது.*

***கிருபையைப் பற்றி கடைசி வார்த்தை (வசனங்கள் 12, 17, 21)***

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது கிருபையைப் பற்றிய வலியுறுத்தத்துடன் தொடங்குவதையும் முடிவதையும் நாம் உற்றுக்கவனித் துள்ளோம் (1:4; 22:21). இந்தப் புத்தகம் நமது கீழ்ப்படிதல்மீது, நமது செய்கைகள்மீது, மற்றும் நாம் நடத்தும் வாழ்க்கை வகைமீது மாபெரும் வலியுறுத்தத்தை இட்டுள்ளது (2:2; 14:13; 20:12): நமது தற்போதைய வசனப்பகுதியில், இயேசு "இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன்[23] என்னோடேகூட வருகிறது'' என்று கூறினார் (22:12). "அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் மாத்திரமே [ஆங்கிலத்தில், 'தங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுத்தவர்கள்' என்றுள்ளது] ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ள வர்கள் ஆவர்'' (வசனம் 14). இருந்தபோதிலும், நமது இரட்சிப்பை நாமே ஈட்ட இயலாது, நாம் அவருடைய கிருபையினாலேயே இரட்சிக்கப்பட்டி ருக்கிறோம் - என்பதை நாம் மறந்துபோய்விடுவதை தேவன் விரும்புவதில்லை.*

*கர்த்தருடைய கிருபைத்தன்மையானது 17ம் வசனத்தில் அழகுமிக்க*

வகையில் விளக்கியுரைக்கப்படுகிறது: "ஆவியும் மணவாட்டியும் 'வா'[24] என்கின்றார்கள்; கேட்கிறவனும் 'வா' என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்."[25]

"ஆவி" என்பவர், வேதாகமத்தின் பிற புத்தகங்களை எழுத ஏவியது போன்றே (2 பேதுரு 1:21), வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தையும் எழுத ஏவிய பரிசுத்த ஆவியாய் இருக்கின்றார் (2:7; 14:13). வெளிப்படுத்தின விசேஷத்தில் "மணவாட்டி" என்பது (நாம் கண்டுள்ளபடி) இயேசுவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்ட சபையாக உள்ளது. மத்தேயு 28:19ல், ஆவியானவருடைய வார்த்தைகளினால் ஊக்குவிக்கப்பட்ட நிலையில் சபையானது உண்மையுள்ளவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்கும்படி ஒவ்வொருவருக்கும் அழைப்புவிடுக்கிறது. இந்த அழைப்பு எல்லாருக்குமானதாயிருப்பதால், கேட்கிறவர்கள் அதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்: "வா[ருங்கள்]."

ஆவிக்குரிய தாகம் ஒன்று நாட்டை நிரப்பிருக்கிறது, ஏனெனில் மனிதர்கள் "ஜீவத்தண்ணீர் ஊற்றை ... விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்" (எரேமியா 2:13). மனிதகுலத்திற்கு இந்த உலகம் தனது பொற்பாத்திரங்களில் "அருவருப்புகளை நிரப்பி" அளிக்கிறது (17:4), மற்றும் மனிதர்கள் அதில் ஆழமாய்ப் பானம்பண்ணுகின்றனர்; ஆனால் அவர்களின் தாகம் முன்னெப்போதைக்காட்டிலும் அதிகமாக அக்கினியாய் காந்துகிறது. அந்த உள்ளான தாகத்தைத் தணிக்கக்கூடியவராயிருக்கும் ஒரே ஒருவர் இந்த அழைப்பை விடுக்கின்றார்: "தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்."

உங்களிடத்தில் மாபெரும் செல்வம் உள்ளதா? உங்களால் "ஜீவத்தண்ணீருக்கு" ஒருக்காலும் விலைகொடுக்க இயலாது. நீங்கள் ஒரு காசுகூட இல்லாதவராய் இருக்கின்றீர்களா? அதைப்பற்றிப் பரவாயில்லை; இது "இலவசமாய் கிடைக்கிறது."

கிருபையைப் பற்றிய கடைசி வார்த்தை என்ன? அது இல்லாமல் நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது - ஆனால் நீங்கள் உங்கள் தேவையை உணர்ந்தறியாமலும் (மத்தேயு 5:6) கர்த்தரிடமாய் வராமலும் இருக்கும் வரையில் அதினால் இரட்சிக்கப்பட முடியாது!

## முடிவுரை (22:20)

நமது பாடத்தொடரை நாம் முடிக்கும் இவ்வேளையில், நமது படிப்புகளினால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று நான் என் முழுபெலத்துடன் ஜெபிக்கின்றேன். ஏதாவதொரு வகையில் நீங்கள் சற்றே மேன்மையாக மாறியிருக்க வேண்டும் என்று நான் நம்பிக்கையாய் இருக்கின்றேன்.

இந்தக் கடைசிப்பாடத்தின் தொடக்கத்தில் நான், கிறிஸ்து மறுபடி

*வருகின்றார் என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் முடிவு வசனங்களின் திறவுகோல் சிந்தனையாக உள்ளது என்று கூறினேன். உண்மையுள்ள வர்களுக்குப் பலன் அளிக்கக் கர்த்தர் திரும்பவும் வருவார் என்ற சிந்தனையானது தொடக்கக்காலக் கிறிஸ்தவர்களுக்கு விலையேறப் பெற்றதாக இருந்தது (2 தீமோத்தேயு 4:8; தீத்து 2:13). அது அவர்களின் சோதனைகளில் அவர்களை நிலைநிறுத்திற்று; அது அவர்களின் இருதயத்திற்குத் தொடர்ந்து கர்த்தரைப் பின்செல்லும் ஊக்கம் அளித்தது. அவர்கள், "மாரநாதா" என்ற சொல்விளக்கத்தைக் கொண்டிருந்தனர் (1 கொரிந்தியர் 16:22), இது "கர்த்தராகிய இயேசுவே வாரும்!" என்று அடிப்படை அர்த்தம் தந்த அரமாயிக் வார்த்தையாக இருந்தது. இது அவர் வருவார் என்ற விசுவாசத்தின் வெளிப்பாடாகவும் அவர் தமது வருகையைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதற்கான ஜெபமாகவும் இருந்தது. இந்த ஜெபமானது கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தல் தொடர்பாகவும் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்டது என்பதற்குத் தொடக்ககால எழுத்தாளர்களின் படைப்புகளில் சில ஆதாரங்கள் உள்ளன.[26] அதே பலத்த விருப்பம் நமது வசனப்பகுதியில் உள்ள 20ம் வசனத்தில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது: இயேசு, "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகின்றேன்" என்று கூறிய பின்பு, யோவான் "ஆமென். கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று பதிலுரைத்தார்.*

*உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் அவருடைய "பிரசன்னமாகுதலை" (2 தீமோத்தேயு 4:8) விரும்புகின்றீர்களா? நீங்கள் "ஆனந்த பாக்கியத்திற்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக் கின்றீர்களா" (தீத்து 2:13)? கிறிஸ்து இப்போது பிரசன்னமாவார் என்றால், நீங்கள் சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டிருப்பீர்களா அல்லது பயத்தினால் நிரப்பப்பட்டிருப்பீர்களா? நீங்கள் யோவானுடன் இணைந்து உண்மையிலே, "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று கூறமுடியுமா?*

*உங்களால் அவ்வாறு கூற இயலாது என்றால், "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:14) இந்த நாள் முடிவதற்குமுன் நீங்கள், "உங்கள் அங்கிகளை தோய்க்கவேண்டும்"/ "அவருடைய கற்பனைகளின்படி செய்யவேண்டும்" என்று நான் ஜெபித்துக் கொள்கின்றேன்.[27] ஒருநாளிலே உங்களுடன் நான் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நின்று அவரைத் துதித்துப்பாடுவேன் என்று நம்பியிருக்கின்றேன்!*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*"தேவன் கடைசி வார்த்தையைக் கொண்டுள்ளார்" என்பது*

இப்பாடத்திற்கான மாற்றுத்தலைப்பாக உள்ளது.

இவ்வசனப்பகுதிக்கான இன்னொரு அணுகுமுறை பின்வருமாறு: “நீங்கள் (கிறிஸ்துவின் வருகைக்கு) தயாராய் இருக்கின்றீர்களா?”:

(1) நீங்கள் பதில்செயல் செய்பவராயிருக்கின்றீர்களா? (வசனங்கள் 6, 7);
(2) நீங்கள் பயபக்தியுடன் இருக்கின்றீர்களா? (வசனங்கள் 8, 9);
(3) நீங்கள் நீதிமானாய் இருக்கின்றீர்களா? (வசனங்கள் 10-12);
(4) நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கின்றீர்களா (வசனங்கள் 14-16);
(5) நீங்கள் ஏற்றுக்கொள்பவராய் இருக்கின்றீர்களா? (வசனங்கள் 16, 17);
(6) நீங்கள் மதிப்பு நிறைந்தவராய் இருக்கின்றீர்களா? (வசனங்கள் 18, 19);
(7) நீங்கள் அகமகிழ்ச்சி உள்ளவராய் இருக்கின்றீர்களா? (வசனங்கள் 20, 21).

பல எழுத்தாளர்கள், 22:6-21 பற்றிய தங்கள் சிந்தனைகளை, இரண்டாம் வருகையின்மீது மையப்படுத்தியிருக்கின்றனர்.

இவ்வசனப்பகுதியின் சிறுதுணுக்குகள், பாடங்களுக்கு அடிப்படைக் கருத்தாகப் பயன்படுத்தப்பட முடியும். பார்ட்டன் காஃப்மென் என்பவர், வெளிப்படுத்தின விசேஷத்திற்கான தமது விளக்கவுரையில், “அல்பாவும் ஒமேகாவுமான கிறிஸ்து” மற்றும் “வேரும் நட்சத்திரமுமான கிறிஸ்து” என்பவற்றின்மீது குறிப்புகளை உள்ளடக்கினார்.[28]

வெளிப்படுத்தின விசேஷம் வசனப்பகுதியை நீங்கள் போதித்து அல்லது பிரசங்கித்து முடித்திருக்கின்றபோது, புத்தகம்முழுவதையும் மறுகண்ணோட்டமிடுவதற்கு ஒன்றிரண்டு வகுப்புகளை எடுக்க நீங்கள் விரும்பலாம். அப்படிப்பட்டதொரு மறுகண்ணோட்டத்தை பிராங்க் பேக் என்பவர் எழுதியுள்ளார்.[29]

பொருள்விளக்கப் பாடங்களின் வரிசைத்தொடர் ஒன்றில் வெளிப்படுத்தின விசேஷத்தின் வசனப்பகுதியை எடுத்துரைத்து முடித்தபின்பு, இந்த புத்தகத்தின் செய்தியைப் போதிப்பதற்குப் பிற வழிமுறைகளும் உள்ளன. ஜேம்ஸ் ஸ்ட்ராவ்ஸ் என்பவர் *The Seer, the Saviour, and the Saved* என்ற தமது புத்தகத்தில், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை தலைப்புரீதியாக அணுகமுடியும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்: தேவன், தூதர்கள், பிசாசானவன், பரலோகம், நரகம் மற்றும் பிற விஷயங்கள் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் கூறுவது என்ன? ஹியூகோ மெக்கார்டு என்பவர், தமது *The Royal Route of Revelation* என்ற புத்தகத்தை, வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய தலைப்புரீதியான மேற்கண்ணோட்டத்துடன் முடித்தார்.[30]

---

குறிப்புகள்

[1]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 117. [2]பேசுவது யார் என்பதைச் சொல்லுதல் எப்போதுமே சுலபமானதல்ல என்பது இந்தப் பதினாறு வசனங்களின் ஒரு அறைகூவலாக உள்ளது. இயேசு, யோவான் மற்றும் தூதத்துவச் செய்தியாளர் ஆகியோரின் குரல்கள் ஒன்றுகலந்துள்ளன. பேசுவது யாராயிருப்பினும்,

*வார்த்தைகள் கர்த்தரிடத்தில் இருந்து வருகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் அவசியமாய் இருக்கிறது.* [3]*முன்பு கலந்துரையாடப்பட்ட வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் ஆகியவற்றைப் பற்றி விளக்கம் தர இப்பாடத்தில் நான் நேரத்தை எடுத்துக்கொள்ளமாட்டேன். "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஆண்டவரே எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் இந்தச் சொற்றொடர்கள் மற்றும் வார்த்தைகளில் பலவற்றைப் பற்றியுள்ள கலந்துரை யாடல்களைக் காணவும்.* [4]*இது இப்புத்தகம் கி.பி. 96ல் டொமீஷியனின் ஆட்சிக்காலத்தின்போது எழுதப்பட்டதென்று யூகித்துக்கொள்கிறது.* [5]*மூலவசனத்தில், ''நான்'' என்பது வலிவார்ந்ததாக உள்ளது. யோவான், தாம் எழுதியவற்றின் அதிகாரத்துவத்தைப் பற்றி தமது வாசகர்கள் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். மேலும் அவர், இந்தப்புத்தகம் மிகக் கற்பனையினால் எழுதப்பட்டதல்ல, ஆனால் தாம் கண்டதையும் கேட்டதையும் மாத்திரமே எழுதியுள்ளார் என்பதையும் வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.* [6]*"இந்த வசனங்களை முத்திரைபோடவேண்டாம்" என்ற கட்டளையானது, இந்தச் செய்தி அப்போது தொலைவிலும் பரப்பிலும் பரப்பப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இது தானியேலுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு நேர்மாறானதாக உள்ளது, அவருக்கு அளிக்கப்பட்ட செய்தியை "முத்திரை போடும்படி" கூறப்பட்டிருந்தது (தானியேல் 12:4). "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "வெளிப்படுத்தின விசேஷம் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஏழு உண்மைகள்" என்ற பாடத்தில், முத்திரையிடுதல், எதிர்-முத்திரையிடாதிருத்தல் என்ற கருத்தின்மீதான குறிப்புகளைக் காணவும்.* [7]*மூலவசனத்தில், ''இயேசுவாகிய நான்'' என்பது வலிவார்ந்ததாக உள்ளது.* [8]*இயேசு "சீக்கிரம் வருகிறார்" என்ற உண்மையானது, 1முதல் 21வரையுள்ள அதிகாரங்கள் எல்லாவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள அதே எண்ணிக்கையில் 22ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.* [9]*நமது படிப்பு முழுவதிலும் இருந்ததுபோன்றே, இவ்விடத்திலும், தற்காலிக "வருகைகளையும்" இந்தக் காலத்தின்முடிவில் நடக்கும் இரண்டாம் வருகையையும் பற்றிய குறிப்புகளுக்கு இடையில் வித்தியாசம் காணுதல் என்பது சுலபமாயிருப்பதில்லை. ரோமாபுரியைத் தண்டிப்பதற்குக் கர்த்தருடைய ''வருகை'' என்பது முதல் நூற்றாண்டில் இருந்த, துன்புற்ற கிறிஸ்தவர்களின் சிந்தைகளில் மேலாதிக்கம் கொண்டிருந்திருக்கலாம். இன்றைய நாட்களில் வாழும் நமக்கு, இந்தக் குறிப்புகள், இரண்டாம் வருகையானது எப்போது வேண்டுமென்றாலும் இருக்கும் என்பதை நினைவூட்டுகின்றன. "வருகையின்" இரு வகைகளும் ஒன்றாக கலந்துள்ளன.* J. W. *இராபர்ட் என்பவர், ''தற்காலிக நிகழ்ச்சிகள், கடைசிவருகையை முன்னெதிர்பார்ப்பதால் அதன் சொற்றொடர்களிலேயே விவரிக்கப்படக்கூடும்" என்று எழுதினார்* (*The Revelation to John [The Apocalypse],* The Living Word Commentary Series [Austin, Tex.: Sweet Publishing Co., 1974], 199). [10]*1:8ல் பிதா பேசுகின்றாரா அல்லது குமாரன் பேசுகின்றாரா என்பது தெளிவற்றுக் காணப்படுவதால், "கர்த்தர்" என்ற பொதுவான சொற்றொடரை நான் பயன்படுத்துகின்றேன். "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் 1:8க்கான குறிப்புகளைக் காணவும்.*

[11]*இயேசு ஏற்கனவே ''உண்மையும் சத்தியமுமுள்ளவர்'' என்று பண்புபடுத்தப்பட்டிருந்தார் (3:14; 19:11); அவரது வார்த்தையும் இந்தப் பண்புகளைப் பங்காகப் பெற்றிருப்பது இயல்பானதாகவே உள்ளது.* [12]*வசனப்பகுதியின் இவ்விடத்தில், வெளிப்படுத்தின விசேஷம் பற்றி எழுதிய பல எழுத்தாளர்கள், தாங்கள் ஏற்படுத்தியுள்ள குறிப்புகளில் கூட்டுதல் குறைத்தல் என்ற*

*குற்றத்திற்குத் தாங்கள் உட்பட்டிருப்பதில்லை என்று நம்புவதாக விளக்கம் கொடுத்துள்ளனர். அதே அக்கறையை நானும் எதிரொலிக்கின்றேன். [13]ஏசாயா 11:1ஐக் காணவும். "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்" என்ற பாடத்தில் 5:5க்கான குறிப்புகளைக் காணவும். [14]நமது படிப்புகளில் நாம் முன்பே வலியுறுத்தியிருப்பதுபோல், இயேசு இப்போது பரலோகத்தில் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்துள்ளார். [15]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும், "யேசபேலை உறுப்பினராகக் கொண்டிருந்த சபை" என்ற பாடத்தில் 2:28ன்மீதான குறிப்புகளைக் காணவும். [16]பர்ட்டன் காஃப்மென் என்பவர், இவ்விடத்தில் யோவானின் செயல், 19ம் அதிகாரத்தில் அவரது செயலில் இருந்து மாறுபட்டுள்ளது என்று உறுதிப்படுத்தினார். 19ம் அதிகாரம், அந்த அப்போஸ்தலர் "அவனை (தூதனை) வணங்கும்படி" அவரது பாதத்தில் விழுந்தார் (வசனம் 10) என்று திட்டவட்டமாகக் கூறுகிறது, அதே வேளையில் 22ம் அதிகாரம், அந்த அப்போஸ்தலர் "ஆராதிக்கும்படி" தூதனின் பாதத்தில் விழுந்தார் என்று மாத்திரம் கூறுகிறது (வசனம் 8) (தமிழ் வேதாகமத்தில் இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இருப்பதில்லை). காஃப்மெனின் கூற்றுப்படி, இந்த இரண்டாம் முறை யோவான் தரையில் விழுந்ததற்கு, தேவனை ஆராதித்தல் என்பதே நோக்கமாய் இருந்தது, மற்றும் அவர் அதைச் செய்வதற்கு தேவனுடைய தூதன்முன்பாகப் பணிந்துகொண்டது என்பதுதான் அவரது பாவமாயிருந்தது. யோவானின் பகுதியில் ஒரேவிதமான தவறு இருந்தது என்று சித்தரிக்குமளவுக்கு இவ்விரு வசனப்பகுதிகளும் நெருக்கமாக இணைவுபட்டுள்ளன: சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தல் என்பதே அந்தப் பாவமாகும். இருந்தபோதிலும் காஃப்மென் என்பவரின் சிந்தனை கவனிக்கத்தக்கதாகவே உள்ளது* (*Commentary on Revelation* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979], 523). [17]*"உண்மையான ஒரே தேவனை ஆராதிப்பதில் இருந்து கவனத்தைத் திருப்பி, தூதர்களின் திரளான கூட்டத்தையும் 'புனிதர்'களையும் மக்கள் தங்களின் ஆராதனைக்குரியவற்றில் உள்ளடக்கியதென்பது பிற்கால சபை வரலாற்றில் பரிதாபத்திற்குரிய விஷயங்களில் ஒன்றாக உள்ளது"* (Frank Pack, *Revelation,* Part 2, The Living Word Series [Austin, Tex.: R. B. Sweet Co., 1965], 70). [18]*மூலவசனத்தில், "கழுவுதல்" என்பது நிகழ்கால வினைச்சொல்லாக உள்ளது, இது "தொடர்ந்து கழுவுதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். நாம் தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் நடக்கையில், கிறிஸ்துவின் இரத்தம் நம்மை நமது பாவங்களில் இருந்து தொடர்ந்து கழுவுகிறது (1 யோவான் 1:7).* [19]KJV *வேதாகமத்தில் "அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள்" என்றுள்ளது. கிரேக்க மொழியில், "தங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுத்தவர்கள்" மற்றும் "அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள்" ஆகிய இரு சொற்றொடர்களும் தோற்றத்தில் ஒரேமாதிரியாயிருக்கின்றன. வசனரீதியான ஆதாரம், "தங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுத்தவர்கள்" என்பதற்கு ஆதரவாக உள்ளது, ஆனால் இவ்விரு சொற்றொடர்களும் அடிப்படையில் ஒரே அர்த்தத்தைக் கொண்டுள்ளன. [20]நியாயத்தீர்ப்பு நாளுக்குப் பின்பு, வச்சிரக்கல்லால் ஆன மதிலுக்கு வெளியே, நாய்களும் துன்மார்க்கமான மனிதரும் சூறையாட சுற்றிக்கொண்டிருப்பதாக சித்தரிக்கக்கூடாது. "புறம்பே" என்பது, அவர்கள் "உள்ளே" இருக்கமாட்டார்கள் என்பதை மாத்திரம் அர்த்தப்படுத்துகிறது. 21:8ன் வார்த்தைகள், 22:15ல் பட்டியலிடப்பட்டுள்ளவர்கள் அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள் என்பதைத் தெளிவாக்குகிறது, இந்த இடமானது வேதாகமத்தின் வேறொரு பகுதியில் "புறம்பான இருள்" என்று*

*விவரிக்கப்பட்டுள்ளது (மத்தேயு 8:12).*

*[21]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும், "புயலுக்கு மேலாக உயருதல்" என்ற பாடத்தில் 7:14க்கான குறிப்புகளைக் காணவும். [22]11ம் வசனத்தின் அர்த்தம் பற்றிய பிற சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன: எதிர்மறைவுக் குறிப்பு அல்லது நகைச்சொல் என்பது உள்ளடங்கியிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது: "போய், உங்கள் இஷ்டப்படியெல்லாம் வாழுங்கள் ... ஆனால் விளைவுகளை அனுபவிக்கத் தயாராய் இருங்கள்." சிலர் பிரசங்கி 11:9 உடன் ஒரு இணைவைக் காணுகின்றனர், அங்கு இளைஞன் தன் இருதயத்தின் தூண்டுதலைப் பின்பற்றும்படி கூறப்படுகின்றான், ஆனால் "அவன் செய்த எல்லாவற்றினிமித்தமும்" தேவன் அவனை நியாயத்தில் கொண்டுவந்து நிறுத்துவார் என்பது அவனுக்கு நினைவூட்டப்படுகிறது. 11ம் வசனத்தின் முதல் பகுதியை, மாற்றப்படக்கூடாதபடி தங்கள் இருதயம் கடினப்பட்டுப்போனவர்கள் பற்றிய விவரிப்பாக மற்றவர்கள் காணுகின்றனர் (எபிரெயர் 6:4-6). [23]"பலன்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை "தரவேண்டியது" என்று அர்த்தப்படுகிறது; இது கூலியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. [24]முதல் இரண்டு "வா" என்பவை (20ம் வசனத்தில் உள்ளதுபோல்) இயேசுவைக் குறிப்பிடும் வேளையில், மூன்றாவது "வா" என்பது மாத்திரமே இழந்துபோகப்பட்டவர்களை அழைப்பதாக உள்ளது என்று சில எழுத்தாளர்கள் நம்புகின்றனர். இம்மூன்றும் இணைவுகளாயிருக்கின்றன மற்றும் ஒவ்வொன்றுமே, கர்த்தரிடம் வரவேண்டிய தேவையுள்ளவர்களை அழைத்திருக்கச் சாத்தியக்கூறுள்ளது. [25]17ம் வசனத்தை ஏசாயா 55:1உடன் ஒப்பிடவும்.* [26]This sentence was adapted from Roberts, 201. *[27]நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், கிறிஸ்தவராவது எப்படி என்றோ (மாற்கு 16:16; நடபடிகள் 2:38) அல்லது மீளக்கட்டுவிக்கப்படுவது எப்படி என்றோ (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16) விளக்கம்தர விரும்பலாம்.* [28]Coffman, 528-29, 532-34. [29]Pack, 75-80. [30]Hugo McCord, *The Royal Route of Revelation* (Nashville: 20th Century Christian, 1976), 52-54.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *1ம் அதிகாரத்தின் முதல் பகுதியை வாசித்து, பின்பு 22ம் அதிகாரத்தின் கடைசிப் பகுதியை வாசியுங்கள். இவ்விரு வசனப்பகுதிகளில் நீங்கள் வாசிக்கக் கூடிய ஒன்றுபோலுள்ள சிந்தனைகள் எத்தனை?*
2. *எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குக் கால அட்டவணையொன்றைக் கொடுத்தல் என்பது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் நோக்கம் அல்ல என்று இந்தப் பாடத்தில் கூறப்பட்டுள்ளது. 22:6-21ல் உள்ள எந்த வசனங்கள் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றன?*
3. *வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆறாம் மற்றும் ஏழாம் "பாக்கியங்கள்," 7 மற்றும் 14 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றன. ஏழு பாக்கியங்களையும் மறுகண்ணோட்டமிடவும். பின்பு ஆறாம் மற்றும் ஏழாம் பாக்கியங்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.*

4. இன்றைய நாட்களிலும் சிலர், தூதர்கள் மற்றும் "பரிசுத்தவான்கள்"/"புனிதர்கள்" என்று அழைக்கப்படுபவர்களின் உருவங்களுக்கு முன்பாக பணிந்துகொள்ளும் குற்றம் உடையவர்களாய் இருக்கின்றார்களா?
5. 11ம் வசனத்தின் முதல்பாகம், தவறுசெய்தல் அல்லது ஒழுக்கரீதியாக அசுத்தத்தில் நிலைத்திருத்தல் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக உள்ளது என்று அர்த்தப்படுகிறதா? இது அவ்வாறு அர்த்தப்பட வில்லையென்றால், இது எதனை அர்த்தப்படுகிறது என்பது பற்றி நீங்கள் நினைப்பதென்ன?
6. நாம் ''அங்கிகளைத் தோய்க்காவிட்டால்''/''அவருடைய கற்பனைகளின்படி செய்யாவிட்டால்" பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. நாம் ''அங்கிகளைத் தோய்ப்பது''/''அவருடைய கற்பனைகளின்படி செய்வது" எவ்வாறு?
7. 15ம் வசனத்தில் உள்ள "நாய்கள்" என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன?
8. நீங்கள் எப்போதாவது ஆவிக்குரிய தாகத்தை அனுபவித்திருக் கின்றீர்களா? நமது தாகத்தைக் கர்த்தர் எவ்வாறு தணிக்கின்றார்?
9. 18 மற்றும் 19ம் வசனங்களைப் பற்றிக் கலந்துரையாடவும். மார்க்க உலகம் வசனத்துடன் ஒன்றைக் கூட்டுகின்ற சில வழிமுறைகள் யாவை? அதிலிருந்து (வசனத்திலிருந்து) ஒன்றை மார்க்க உலகம் எடுத்துப்போடுகின்ற சில வழிமுறைகள் யாவை?
10. ''மாரநாதா'' என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? நீங்கள், "கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று கூறி, அதை அர்த்தப்படுத்த முடியுமா?
11. வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய நமது படிப்பின்போது நீங்கள் கற்றறிந்த முக்கியமான சத்தியம் என்ன?